# வள்ளலார் தந்த திருவருட்பா - திருவருட்பா சுட்டும் இசைஅம்சங்கள்

*கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன், விரிவுரையாளர், இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.
saravinthon@hotmail.com , +94 773 166 799.

### முன்னுரை

வள்ளலார் அவர்கள் தமது கருத்துக்களை மக்களுக்கு வெளிப்படுத்துவதில் இசை ஒரு கருவியாக இருந்திருக்கின்றது. வள்ளலார் அவர்களுடைய பாடல்கள் அனைத்துமே இசை கூட்டிப்பாடவல்லவை. இவருக்கிருந்த இசைப்புலமையின் வெளிப்பாடு இவரது படைப்புக்களின் நேர்த்தியின் வாயிலாகப் புரிந்து கொள்ளமுடிகின்றது.

வள்ளலார் அவர்கள் பள்ளிக்கல்வியை சிறு வயதிலேயே விடுத்து இயற்கையை உணர்ந்து மற்றவர்களுக்கும் இயற்கையின் பேரண்மையைப்புலப்படுத்த விளைந்த மகான். ‘பாட்டுவித்தால் பாடுகின்றேன் பணிவித்தால் பணிகின்றேன்’ என்ற இவரது கூற்று இவர் பாடல்களை மிகுந்த ஆர்வத்துடன் பாடினார் என்று கொள்ளமுடிகின்றது.

இப்புலமைக்குக்காரணம் அருட்பெரும் ஒளியே என்று தன்னடக்கத்துடன் வள்ளலார் இவர்கள் குறிப்பிட்டு நிற்பதும் இங்கு கூறற்பாலது.

### பாட்டின் தன்மை.

வள்ளலார் பாடலின் தன்மையினை இருபிரிவுகளாகக் குறிப்பிடுகின்றார்.

1. அருட்பா
2. மருட்பா

மனிதனிடத்தில் எல்லா உயிர்களுக்காகவும் நன்மை செய்யும் விதத்தில் வாழ்கின்ற அருள் வாழ்க்கையை, வாழும் இயல்பை உருவாக்கும் இலக்கியங்கள் அருள் இலக்கியங்கள் என்று குறிப்பிடுகின்றார்.

இவை தவிர மனிதகுலம் பற்றி மாத்திரம் பேசுவது மருள் இலக்கியங்கள் என குறிப்பிடுகின்றார். ஆனால் மருள் இலக்கிய வகைகளை வள்ளலார் அவர்கள் வரவேற்பாரல்லர். மானிடர்க்காக மாத்திரம் பாடவது முறையாகாது என்றும் மானிடரை இறை பால் ஆற்றுப்படத்தப்பாடப்படுவதே முறை என்றும் வள்ள்லார் இவர்கள் குறிப்பிடுகின்றார்.

### வள்ளலாரின் இசைப்புலமை

வள்ளலார் பாடல்கள் பல இருப்பினும் இசைத்தளம் சார்ந்து இருக்கக்கூடிய கன்னிகள் , கீர்த்தனைகள், நாமாவளிகள் போன்ற பாடல் வடிவங்கள் மாத்திரம் இவ்வாய்வுக்கட்டுரையிலே எடுத்து நோக்குவதாக இருக்கின்றது.

வள்ளலார் அவர்கள் ஏறத்தாழ முப்பது இராகங்களைக்கொண்டு பாடல்களைப் பாடியுள்ளார். இந்த இராகங்கள் அனைத்தும் கர்நாடகஇசை மரபிலே பயன்படுத்தப்படுபவை. எடுத்துக்காட்டாக கல்யாணி, தோடி, மோகனம், சங்கராபரணம், அடானா, காம்போதி, ஆனந்தபைரவி, பைரவி, கமாஸ், சிந்துபைரவி, தர்பார், தன்யாசி, எதுகுலகாம்போதி, பந்துவராளி, நீலாம்பரி, புன்னாகவராளி, செஞ்சுருட்டி, தீரசங்கராபரணம், பியாகடை, காபி, நாதநாமக்கிரியை, உசேனி, சஹானா, கருடத்வனி, வசந்தா முதலிய இராகங்களைக் குறிப்பிடமுடியும். இவைதவிர எண்வகைத்தாளங்களையும் இவர் தன்னுடைய பாடல்களைலே பயன்படுத்தியிருக்கின்றார்.

### கண்ணிகள்

சிற்றிலக்கிய உறுப்புக்களுக்குள் அடி இரண்டாகத் தொகுக்கப்படுவது கன்னிகளாகும். இரண்டு இரண்டு மலர்களைக் கொண்டு மாலைதொடுப்பதுபோல அமைவது கன்னியாகும். இப்பாடல்களிலே மகுடமாக வருகின்ற சொல்லை வைத்து இந்த கன்னிகள் பெயர் சூட்டப்படும்.

இவ்வாறு பதினெட்டுத் தலைப்புக்களின் கீழ் வள்ளலார் அவர்கள் கண்ணிகளைப் பாடியிருக்கின்றார். இந்தக் கண்ணிகளில் பதினான்கு இராகங்களும், ஆறு தாளங்களும் விரவி வந்துள்ளன. இவரது கண்ணிகளில் ஒரு சொல்லை இரு முறை உரைத்துப் பாடியுள்ளமை அந்தப்பாடல்களில் தாம் இறைவனைப் போற்றுமுகமாக தன் உணர்ச்சி மேலீட்டால் வந்தமையாயினும் இசைநயம் மிகச்சிறப்புற விளங்குவனவாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக,

**‘சிவசிவ சிவசிவ ஜோதி – சிவ**

**சிவசிவ சிவசிவ சிவசிவ ஜோதி**

**சிவசிவ சிவசிவ ஜோதி’**

என்கின்ற ‘சிவ சிவ ஜோதி’ யின் பல்லவியைக் கூறலாம். இவ்வாறே வருகைக்கண்ணியில் காம்போதி இராகத்தில், இறுதிச்சீர் ‘வாரீர்’ என்றும், வேட்கைக் கண்ணியில் ஆனந்தபைரவி இராகத்தில் ‘அணைய வாரீர்’ என்றும், ஆடலமுதக்கண்ணியில் மோகன இராகத்தில் ‘ஆட வாரீர்’ என்றும் அமைகின்றவாறு வள்ளலார் அவர்கள் பாடியிருப்பது சிறப்புக்குரியது.

வருகைக்கண்ணியில் அகரம் முதல் ஔகாரம் வரை பன்னிரு எழுத்துக்களையும் கொண்டு கண்ணிகளை அமைத்தமை வள்ளலார் அவர்களின் இசைப்புலமைக்கு மாத்திரமல்லாமல் தமிழ்ப்புலமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது.

வெண்ணிலாக்கண்ணியிலே,

**‘தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே – ஒரு**

**தந்திரநீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே’**

என்று பாடியிருப்பது இசைநயம் மிக்கபாடலாக விளங்குகின்றது. இவ்வாறு பல கண்ணிப்பாடல்களை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட முடியும்.

**கீர்த்தனைகள்**

இசைப்பாடல்களாகிய கீர்த்தனைகளைக் கணக்கிடுவதிலே சில சிக்கல்கள் உண்டு. கீர்த்தனைகள் நான்கு வகையாக வகுக்கப்படுகின்றன.

1.பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய மூன்றையும் சேர்த்து ஒரே பாடலாகக் கொள்வது.

2. பல்லவியை நீக்கி அனுபல்லவியையும் சரணங்களையும் தனித்தனி ப்பாடல்களாகக் கொள்வது.

3. பல்லவியையும் அனுபல்லவியையும் நீக்கி சரணங்களை தனித்தனி ப்பாடல்களாகக் கொள்வது

4. பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனி ப்பாடல்களாகக் கொள்வது.

இருந்தபோதிலும் வள்ளலார் அவர்கள் கர்நாடக இசை மரபினைப்பின்பற்றி பல்லவி, அனுபல்லவி, சரணம் என்கின்ற வகைப்பாட்டின் அடிப்படையிலே பல கீர்த்தகைகளை யாத்திருக்கின்றார்.

எடுத்துக்காட்டாக தோடி இராகத்திலமைந்த நடேசர் கீர்த்தனையைக் குறிப்பிட முடியும்.

**‘தெண்டனிட்டே னென்று சொல்லடி – சுவாமிக்கி நான்**

**தெண்டனிட்டே னென்று சொல்லடி’.**

இவை தவிர கல்யாணி இராகத்திலே அமைக்கப்பெற்ற ‘இது நல்ல தருணம் அருள்செய்ய’, உசேனி இராகத்தில் அமைந்த’ என்ன புண்ணியம் செய்தேனோ’, பியாகடை இராகத்திலமைந்த ‘வருவார் அழைத்து வாடி’ ,போன்ற கீர்த்தனைகயை முக்கியமாகக் குறிப்பிட முடியும். இக்கீர்த்தனைகள் அனேக இசைக்கச்சேரிகளில் கலைஞர்களால் இன்றும் விரும்பிப் பாடப்பட்டு வருகின்றமை இவரது இசைப்புலமைக்கான சான்றாக அமையும்.

இது தவிர பல்லவி மற்றும் சரணங்கள் மாத்திரம் அமைக்கப்பட்ட கீர்த்தனை வகைகளும் இவரால் அமைக்கப்பட்டிருக்கின்றன. நடேசர் கீர்த்தனையாகிய ‘ என்னவுந்தயவு இல்லையா’? என்கின்ற காம்போதி இராகக் கீர்த்தனை, ‘ஆடியபாதம்’ தன்யாசி இராகத்திலமைந்த கீர்த்தனை, ‘அபயம் அபயம்’ தோடி இராகத்திலமைந்த கீர்த்தனை போன்றவற்றை எடுத்துக்காட்டுக்களாகக் குறிப்பிட முடியும்.

## ஆடற்பாடல்கள்.

கீர்த்தனைப்பகுதியிலுள்ள சில பாடல்கள் பாடி ஆடுவதற்கு ஏற்ற நாட்டப்புறப்பாடல் போன்ற அமைப்பிலுள்ள கும்மிப்பாடலாக அமைந்துள்ளன. சண்முகர் கும்மி உசேனி இராகத்தில் உள்ளது. 'நடேசர் கும்பியில் ஆனந்தபைரவி விரவிக்காணப்படுகின்றது. பொம்மைபோல் கைகளைக் குவித்து ஆடுதல் கும்மி ஆகும். பெதும்பைப் பருவ மகளிர் பொம்மை போல் கைகளைக்குவித்து பலரும் வட்டமாய் நின்று கைகளைத் தட்டியும், குவித்தும், வாயாற் பாடிக் கொண்டு சுழன்றாடும் கும்மி நாட்டுப்புறங்களில் விழாக்காலங்களில் நிலவு விளங்கும் முன்னிரவில் மகளிர் கும்மியை ஆடுதலை இந்நாளிலும் காணலாம். இது ஆனந்தபைரவி இராகத்தில் பாடி ஆடி அமைத்திருந்தனர். 'வானத்தின் மீது மயிலாடக்கண்டேன்' என்ற பாடல் எளிய மக்களைக்கவரும் வகையிலே எழுதப்பட்டிருக்கின்றது. இவ்வாறான கருத்துப்பொலிவான பாடலடிகள் வள்ளலாரின் தனித்துவத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாகத் திகழ்கினறன.

## நாமாவளிகள்

இறைவன் பெயரினைப் பலமுறை உச்சரித்தல் நாமாவளி என்கிறோம். நாமாவளிகளை 14 தலைப்புக்களில் பதினொரு இராகங்களைப் பயன்படுத்திப் பாடியுள்ளார். இதில் கர்நாடகஇசை மரபிலே கையாளப்படுகின்ற இராகங்களையும் ஆங்கில மெட்டுடன் சங்கராபரண இராகத்தையும் வைத்துப்பாடியுள்ளார். அப்பாடல்கள் 'போகமும் சுகபோகமும்' , 'சூது மன்னுமிந்தையே' என்பனவாகும்.

கர்நாடக இசை, ஆங்கில மெட்டுத்தவிரவும் ஹிந்துஸ்தானி இசைமரபிலே கையாளப்படுகின்ற இராகங்களான ஹிந்துஸ்தானி பியாக் இராகத்திலே பொது நிலையருள்வது என்கின்ற பாடல் பகுதியையும், ஹிந்துஸ்தானி தோடி இராகத்திலே வேதசிகாமணியே என்கின்ற பாடல் பகுதியையும் பாடியுள்ளார். நாமாவளியில் சிறப்பாக 72 மேளராகங்களுள் ஒன்றான தீரசங்கராபரணம் என்கின்ற இராகத்திலே 'விரைசேர் சடையாயட ' என்ற பாடலைப்பாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

வள்ளலார் அவர்களது பாடல்கள் உலகப் பொது நன்மைக்காக எழுதப்பட்டாலும் கர்நாடக இசைமரபு தழுவியனவாகப் பெரும்பாலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவர் கையாண்டிருக்கின்ற பாடல் அமைப்புமுறைகள், தாள அமைப்பு முறைகள், இராக அமைப்ப முறைகள் என்பனவற்றினடியாக நோக்கின் கர்நாடக இசைமரபின் செழுமைக்கு அணிசேர்ப்பனவாகவே இவரது பாடல்கள் அமைந்திருக்கின்றன என்கின்ற முடிவுக்கு வரமுடியும். இது தவிர இவரது பாடல்களில் கர்நாடக இசைமரபு தவிர்ந்த மேலைத்தேய இசைமரபு மற்றும் ஹிந்துஸ்தானி இசை மரபு ஆகிய இவை மபைகளின் சாயல்களும் ஆங்காங்கே தெரிவது இவரது படைப்புக்களுக்கு மேலும் இசை சார் சிறப்பைச் சேர்க்கின்றது.

## உசாத்துணை:


1. இளங்கோ : வள்ளலாரின் கீர்த்தனைப்பகுதி : சென்னைப் பல்கலைக்கழகம் :1990
2. ஊரனடிகள் : திரு அருட்பா இசைப்பாடல்கள் : ஒரு சிற்றாராச்சி, திருவருட்பா இசைவிழா மலர், திருவருட்பா இசைச்சங்கம் : வடலூர்: 1985
3. மாணிக்கவாசகர் : திருவருட்பா மணிகள் : விவகானந்த சபை : கொழும்பு 1995